**தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 19 வகையான பொருட்களில் 28 அலகுகளின் கூட்டுமொத்தம் ரூபா 10,220 தொகையான ஏலவிற்பனை மூலமும், 14 வகையான பொருட்களில் 42 அலகுகள் அழிவடையச் செய்யப்பட்டதன் மூலமும் அகற்றப்பட்டிருந்த போதிலும் அந்த அகற்றல்களில் நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-6 படிவத்தின் கீழ் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அகற்றப்பட்டவைகளின் கீழ் அறிக்கையிடப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டில் அகற்றப்பட்டவைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | இந்தப் பொருட்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத பொருட்களாகும். அதன் காரணமாக இந்த பொருட்களின் புத்தகப் பெறுமதி இனங்காணப்படாமையினால் அவ்வாறு சீராக்கம் செய்யப்படவில்லை. 2019 ஆம் ஆண்டு முதல் சொத்துக்கள் அகற்றப்படும் போது அகற்றப்பட்ட பெறுமதி சரியான பிரகாரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

அலுவலகத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (i) கிடைக்கின்ற காசோலைகள், காசுக்கட்டளை போன்றவற்றுக்கான பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகள், காசுக்கட்டளை போன்றவற்றுக்கான பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 451 இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் ஜீ.ஏ.எம். 83 என்ற மாதிரிப் படிவத்தின் படி கிடைக்கின்ற காசு, காசோலைகள், காசுக்கட்டளை என்பவற்றை பதியக்கூடிய வகையில் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட வேண்டும். | 03 காசோலைகளின் பெறுவனவுகள் கைத்தவறினால் அந்த பரிவேட்டில் பதிவதற்கு முடியாதிருந்தது. |
| (ii) வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் | | |
| நிதிப் பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் நாளதுவரையாக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 1645(அ) இல் பிரகாரம் காண்பிக்கப்படுகின்ற பொது 267 படிவத்தின் படி ஒவ்வொரு வாகனம் தொடர்பாகவும் வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (iii) வாகன நிரற்படுத்தல் பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரற்படுத்தல் பதிவேடு பேணப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரற்படுத்தல் பதிவேடு பேணப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

(இ) கணக்காய்வுச் சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருக்கு அரச நிர்வாக அமைச்சினால் வழங்கப்பட்ட B-12 என்ற அரசாங்க உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் அலுவலகத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் அந்த அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட் பதிவேட்டுப் பொருட்கள், மீண்டும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்திற்கோ அல்லது அரச நிர்வாக அமைச்சிற்கோ கையளிக்கப்பட்டதா என்பதைப் பரீட்சிப்பதற்கான சான்றுகள் கணக்காய்வுச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் இலக்கம் 6 மற்றும் 7 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட நபர் கோருகின்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii) | 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனம் உரித்தான உத்தியோகதத்ருக்கு மேலதிக எரிபொருள் அங்கீகரிக்கும் பதிவேடு மற்றும் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10.2 ஆம் பரிவின் பிரகாரம் 1/20 படி செலுத்தும் பதிவேடு அலுவலகத்தால் பேணப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்வுச் சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுரை மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்யிருந்ததுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் இலக்கம் 6 மற்றும் 7 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட நபர் கோருகின்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(ஈ) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்யிருந்ததுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக முன்னரே மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் வினைத்திறனாக நடாத்திச் செல்வதற்கான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அந்த மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்வுச் சமர்ப்பிக்கப்பட வில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பந்தியின் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | என்னால் காண்பிக்கப்பட்டுள்ள உறுதிப்படுத்தல்கள் நிதிப் பிரமாணம் மற்றும் திறைசேரி சுற்றறிக்கையின் படி தற்போதும் சரியாக மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் குறிப்பாக குறித்துரைக்கப்படாதுள்ள இந்த கூற்றுடன் இணங்க முடியாதுள்ளது. |

**(உ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு<br>-------------------------------------- | இணங்காமைகள்<br>-------------------------- | பரிந்துரை<br>------------------- | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>-------------------------------- |
| --- | --- | --- | --- |
| (i) நியதிச் சட்ட ஏற்பாடுகள்<br>---------------------------------- | | | |
| 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2006 இன் 12 அம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 மற்றும் 6 ஆம் பிரிவுகள் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 798,365 கூட்டுத்தொகையான 15 உறுதிச்சீட்டுக்களின் தெரிவுப் பரிசேதனையின் போது கொடுப்பனவுகளில் உரிய முத்திரைக் கட்டணம் அறவிடப்படவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | துற்போது குறித்த பிரகாரம் முத்திரைக் கட்டணம் அறவிடப்படுகின்றது<br>. |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------------- | | | |
| நிதிப்பிரமாணம் 104, 109 | 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நட்டங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 492,559 தொகையான 06 வாகன விபத்துக்களுக்கு உரிய நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் பொது 283, 284 மற்றும் 285 படிவங்களின் மூலம் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 செப்தெம்பர் வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2017 செப்தெம்பர் 19 ஆந் திகதி ஒரு வாகன விபத்தினால் ஏற்பட்ட ரூபா 358,721 தொகையான நட்டத்தில் ரூபா 10,809 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு தவறியிருந்தது. | காணாமல் போதல் / இழப்பு நிதிப்பிரமாணம் 102 முதல் நிதிப்பிரமாணம் 109 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் பொது 283, 284 மற்றும் 285 படிவங்களின் மூலம் குறித்துரைத்த காலப்பகுதியில் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை<br>-----------------------------------<br>-- | | | |
| | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க, 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(1) ஆம் இலக்க மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | இந்த அலுவலகத்தில் ஊழியர்கள் தமது சேவை நிலையதத்திற்கு வருகை மற்றும் வெளிச் செல்லுதல்களை பதிவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை. 2018 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டம் 2018 மே 31 ஆந் திகதிக்கு முன்னர் அலுவலகத்திற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்துவதற்கு ரூபா 150,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் ஆண்டின் இறுதிவரையிலும் அந்த பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த அலுவலகத்திற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அதனைப் பொருத்துவதற்காக பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட இடம் பொத்தமின்மையால்அது பொருத்தப்படவில்லை. அதன் பிரகாரம் நாளாந்த வருகை மற்றும் வெளிச் செல்கை பதிவேடு மூலம் நாளதுவரையாகப் பேணிச் செல்லப்படுகின்றது. |
| | 2007 ஏப்ரல் 20 ஆந் திகதிய 22/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருக்கு 2017 சனவரி 04 ஆந் திகதி முதல் B-12 என்ற அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இல்லம் ஒதுக்கப்பட்டதன் பின்னர் அவருக்கு 1997 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் ஒதுக்கப்பட்டிருந்த கொழும்பு 05, 2D வீடடுத் தொகுதி மீண்டும் அரச நிர்வாக அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) அரச நிதிச் சுற்றறிக்கை<br>---------------------------------<br>2014 திசெம்பர் 30 ஆந் திகதிய 03/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03(viii) ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு முரணாக ரூபா 39,100 தொகையில் கையடக்கத் தொலைபேசி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு முரணாக கையடக்கத் தொலைபேசி மற்றும் துணைப் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 171,469 தொகையான கூட்டுச் செலவினம் செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரசாங்கத்தின் அநேக அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயற்பாடுகளுக்கு புறம்பான நடவடிக்கைகள் இந்தஅலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் இந்த கடமை நடவடிக்கைகளின் போது தொலைத்தொடர்பு வசதிகள் கையடக்க தொலைபேசி மூலம் அநேகமாக மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் இவ்வாறு கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்டிருந்ததைக் குறிப்பிடுகின்றோம். |

(ஊ) அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

முறையான அங்கீகாரமின்றி பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| எதிர்க்கட்சித் தலைவரின் இலக்கம் 30 என்ற அலுவலகத்தை சுத்தப்படுதும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உரிய நிறுவனத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 702,400 கூட்டுத்தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதும் வார இறுதி மற்றும் அரசாங்கத்தின் விடுமுறை தினங்களில் 30 ஆம் இலக்க அலுவலகம் | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேவைத் தேவையின் அடிப்படையில் மாத்திரம் அரசாங்கத்தின் விடுமுறை தினங்களில் அவர்களின் சேவை பெறப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| மூடப்பட்டிருந்தமையாலும் அந்த நாட்களில் சுத்தப்படுத்தும் ஊழியர்களின் வருகை அறிக்கையிடப்படாதிருந்ததுடன் நிலைய பொறுப்பு உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டிருக்கும் போது மற்றும் சேவை உடன்படிக்கை மூலம் அவ்வாறான கொடுப்பனவுகள் செய்யப்படுகின்ற முறை தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வராதிருக்கும் போது சனிக்கிழமை மற்றும் அரசாங்கத்தின் விடுமுறை தினங்களில் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டு சுத்தப்படுத்தும் ஊழியர்களுக்காக கொடுப்பனவு மற்றும் குறைந்த மணித்தியால எண்ணிக்கையில் சேவையாற்றியுள்ள நாட்களுக்காகவும் முழுமையான நாள் சம்பளம் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | | அந்த வருகையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிபிரமாணம் 94(2) இன் பிரகாரம் வழங்கல் மற்றும் சேவை தொடர்பாக வருடாந்த மீண்டெழும் செலவினங்களுக்குரிய ரூபா 252,100 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள், நிதிக் கூற்றுக்களின் அட்டவணை (iv) இன் கீழ் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 94(2) இன் பிரகாரம் வழங்கல் மற்றும் சேவைகள் தொடர்பாக வருடாந்த மீண்டெழும் செலவினம், நிதிக் கூற்றுக்களில் அட்டவணை (iv) இன் கீழ் உள்ள பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் பொறுப்புக்களுக்காக இந்த அலுவலகம் பொறுப்புக்களை ஏற்படுத்தி இருக்கவில்லை. இதனால் இதன் கீழ் உரிய அறிக்கையில் குறிப்பிடுவதற்கு தேவையொன்று ஏற்படவில்லை. |
| (ஆ) 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 | சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் | உரிய பொறுப்புக்கள் CIGAS நிகழ்ச்சித் |

| | | |
|---|---|---|
| ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் அட்டவணை- (iii) இன் கீழ் காண்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றுடன் இணங்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு அறிக்கையிடப்படாத எந்தவொரு கடப்பாடோ அல்லது பொறுப்போ முன்னைய ஆண்டின் செலவினமாக 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்துவைக்க முடியாதிருந்தது. எனினும் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அறிக்கையிடப்படாத நிதிக்கூற்றுக்களின் அட்டவணை- (iii) இன் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 331,146 கூட்டுத்தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | கூற்றுக்களில் அட்டவணை- (iii) இன் கீழ் காண்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு அறிக்கையிடாத எந்தவொரு கடப்பாடோ அல்லது பொறுப்போ முன்னைய ஆண்டின் செலவினம் ஒன்றாக 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்துவைக்க முடியாது. | திட்டத்தின் கீழ் உள்ளடக்குதல் தொடர்பாக திறைசேரியின் சரியான ஆலோசனைகளைப் பெற்று 2019.01.25 ஆம் திகதி நடைபெற்ற CIGAS தொர்பான செயலமர்வின் போது குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த திகதி வரையிலும் அலுவலகத்தில் 2019 ஆம் ஆண்டிற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் CIGAS கணனி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் இவ்வாறு ஏற்பட்டிருந்ததைக் குறிப்பிடுகின்றோம். எவ்வாறாயினும் இந்த கடப்பாடுகள் 2019 ஆம் ஆண்டு CIGAS கணனி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடுகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட வேண்டிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் வருடாந்த | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த அலுவலகத்தினால் சரியாக உரிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமையைக் குறிப்பிடுகின்றோம். |

செயற்பாடுகளுக்கான கட்டுநிதித் தேவைத் திட்டம் (Imprest Requirement Plan) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 பெறுகை**

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 19-01-01-1201 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகளுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 1,500,000 செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதும் ஆண்டின் இறுதியில் ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,100,000 ஆக இருந்தது. ஆண்டின் போது அதில் ரூபா 997,762 தொகையான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த போதும் அதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் வருடாந்த பெறுகைக் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். | இவ்வாறு சேமிப்பு ஏற்படுவதற்கு ஆண்டில் செலவினங்கள் சரியாக முகாமை செய்யப்பட்டு குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) மீளாய்வாண்டில் பாராளுமன்ற எதிக்கட்சித் தலைவரின் பீ – 12 உத்தியோகபூர்வ இல்லத்திற்காக ரூபா 3,960,000 தொகையான செலவினத்தில் சூரியகல சக்தி முறைமையைப் பொருத்தும் பெறுகை தொடர்பாக பின்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டன.

| | பெறுகை வழிகாட்டி | இணங்காமைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (i) | 4.2.2, 4.2.3 மற்றும் பெறுகைக் கைநூலின் 4.2.3 இல் காண்பிக்கப்பட்ட 2.5.1(அ), (இ), 2.6.1(அ)(i), 2.11.1, 2.11.1(ஆ) | பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த பெறுகைகளுக்காக 2008.01.01 ஆம் திகதி முதல் 2018.06.30 ஆம் திகதி வரையான காலம் பெறுகைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இந்த பெறுகை தொடர்பாக பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | குழுவினால் குறித்த பிரகாரம் அந்த குழுக் கூட்டம் நடாத்தி தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமை யையும் குறிப்பிடுகின்றோம். |
| (ii) | 4.3.1 | 2018 ஆம் ஆண்டில் பெறுகைத் திட்டத்தில் ரூபா 3,200,000 கிரய மதிப்பீடொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதும் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதில் உள்ளடங்கியுள்ள சகல செலவினங்களுடனும் மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய சகல சகல செலவினங்களையும் உள்ளடக்கிய மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டும். | இதற்காக ஆரம்பக் கிரயம் இனங்காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2018 இன் வருடாந்த பெறுகைத் திட்டத்தில் ரூபா 3,200,000 தொகை உள்ளக்கப்பட்டிருந்தமையைக் குறிப்பிடுகின்றோம். |
| (iii) | 5.3.1, 5.3.3, பெறுகைக் கைநூலின் 5.3.3 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கேள்வி சமர்ப்பிக்கும் பதிவேட்டு ஆவணங்கள் | ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி சமர்ப்பிக்கும் பதிவேட்டு ஆவணங்களின் பிரகாரம் கேள்விகோரும் ஆவணங்களின் மாதிரிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கையேட்டுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி படிவங்களின் பிரகாரம் கேள்வி பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும். | இந்த பெறுகைக்குரிய சகல தகவல்களும் ஆலோசனையின் பிரகாரம் வழங்குனருக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. Conditions of Contract (CC) இல் விடயங்கள் பொருந்தும் வகையில் மாற்றுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது. |
| (iv) | 5.3.13, 5.4.10(இ) மற்றும் பெறுகைக் கைநூலின் 5.4.8 | கேள்விக் காப்புறுதியில் பெறுமதி தீர்மானிக்கப்பட்ட முறையை இணங்காண்பதற்கான சான்றுகள் காணப்படாதிருந்ததுடன் | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கேள்வி காப்புறுதியிலும் செயலாற்றல் காப்புறுதியிலும் பெறுமதி மதிப்பீடு | தற்போது பெறுகை நடவடிக்கைகளின் போது மதிப்பீட்டுப் பெறுமதியின் சதவீதம் தீர்மானிக்கும் முயற்சி எடுக்கப்பட்டிருந்ததுடன் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகளின் போது நிலையான பெறுமதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயலாற்றல் காப்புறுதியின் பெறுமதி கேள்விகோரும் ஆவணங்களில் காண்பிக்கப்பட வில்லை. | செய்யப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் கேள்வி நிறுவனத்தினால் தீர்மானிக்கப்பட்டு கேள்விகோரும் ஆவணங்களில் குறிப்பிடப்பட வேண்டும். | தீர்மானிக்கப்பட்டு கேள்வி காப்புறுதி பெற்றுக் கொள்ளப்படுகின்றது. கேள்வி காப்புறுதி சான்றுதழின் பெறுமதி ஆரம்பத்திலேயே ரூபாய் பெறுமதியில் தீர்மதானிக்கப்பட முடியாதிருந்ததுடன் அதன் போது பொதுவாக தெரிவுசெய்யப்படுகின்ற வழங்குனர்களினால் அவர்களினாலேயே முன்மொழிவு செய்யப்பட்ட தொகையில் 10 சதவீதம் செயலற்றல் பிணைமுறியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (v) | - | தனிப்பட்ட பாவனையின் மூலம் மின்சாரப் பயன்பாட்டைக் குறைக்கக்கூடிய மாற்றுவழிகளைப் பரீட்சித்தல் அல்லது அதனை மேற்கொள்ளாமல் இந்த உத்தியோகபூர்வ இல்லத்தை பழுதுபாத்தலுக்காக ரூபா43,000,000 தொகையான ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் இந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சூரியகல சக்தியைப் பொருத்துவதற்கு பெறுகை நிறுவனத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | அதிக பெறுமதியுடைய பெறுகையொன்று தனிப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்திற்கு மேற்கொள்வதற்கான தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் அதன் கிரயத்திற்கு ஒப்பாக அந்த நிறுவனம் பயன்பாடு உள்ளதும் அதற்குப் பதிலாக பின்பற்றக்கூடியதான மாற்று வழி உள்ளதா என கவனம் செலுத்துதல் வேண்டும். | சூரியகல சக்தியின் கீழ் மின்சாரத்தை வழங்கும் அரசாங்கத்தின் முன்னுரிமைப் பணியாக இருந்ததைக் குறிப்பிடுகின்றோம். இது வரையிலும் அநேக அரசாங்க நிறுவனங்கள் இவ்வாறு சூரிய சக்தியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையை குறிப்பிடுகின்றோம். அதன் பிரகாரம் காணப்படுகின்ற தேவையின் பிரகாரம் இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டதை அறியத்தருகின்றோம். இந்தமுதலீடு 4 வருடங்கள் ஆன மிகவும் சிறிய காலத்தினை மேவுகை செய்கின்றதையும் குறிப்பிடுகின்றோம். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளபடியான கடமை நேரத்தின் பின்னர் செலுத்தப்படுகின்ற படிகளுக்காக எடுக்கப்படுகின்ற காலம் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக வரவு பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது பிற்பகல் 6.30 மணியின் பின்னர் பாராளுமன்றக் கூட்டம் முடிவுறும் நாட்களுக்காக ரூபா 617,250 தொகையான போக்குவரத்துப் படி, ரூபா 548,108 தொகையான மேலதிக மற்றும் விடுமுறை தின சம்பளம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்கான கொடுப்பனவுகள் ரூபா 1,015,835 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,181,193 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் காலத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் வருகை வெளிச்செல்கை உறுதிப்படுத்த வேண்டியிருந்தமை யால் அதன் பிரகாரம் கொடுப்பனவு நடவடிக்கைகளை ச் செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்க ள் கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். | இதற்கு முன்னைய ஆண்டுகளின் போதும் இதற்காக பதில் வழங்கப்பட்டுள்ளது. குறித்த பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களின் வருகை வெளிச் செல்லுகை உறுதிப்படுத்தப்பட்டு குறித்த பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

## 4. மனித வள முகாமைத்துவம்

### 4.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் வெற்றிடமான பதவியணியினர்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் முறையே 78, 60 மற்றும் 18 ஆக இருந்தன.